தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253


# நமது தினகனி

NAMADHU DHINA KANI

காலை நாளிதழ்




| Vol: 02 | Issue: 99 | 4 Pages | 7.11.2024 | Thursday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 99 | 4 பக்கங்கள் | 7.11.2024 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**இறந்தார் இறந்தா ரனையர் சினத்தைத்**
**துறந்தார் துறந்தார் துணை**

**விளக்கம்:**
**சினத்தில் அளவு கடந்து சென்றவர் இறந்தவரைப் போன்றவர், சினத்தை அடியோடு துறந்தவர் துறந்தவர்க்கு ஒப்பாவர்.**

## பாகிஸ்தானில் 7 பயங்கரவாதிகள் சுட்டுக்கொலை




இஸ்லாமாபாத், நவ.7

பாகிஸ்தானில் சமீப காலமாக பயங்கரவாத தாக்குதல் அதிகரித்துள்ளது. குறிப்பாக தலீபான்கள் ஆட்சியைக் கைப்பற்றிய பிறகு ஆப்கானிஸ்தானில் இருந்து பாகிஸ்தானுக்குள் பயங்கரவாதிகள் அதிகளவில் ஊடுருவுகின்றனர். இதனை கட்டுப்படுத்தஎல்லைபகுதியில்ராணுவவீரர்கள்தீவிரகண்காணிப்பில ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தநிலையில் ஆப்கானிஸ்தானில் இருந்து பலுசிஸ்தான் மாகாணம் வழியாக பயங்கரவாதிகள் ஊடுருவ முயற்சிப்பதாக உளவுத்துறைக்கு தகவல் கிடைத்தது. அதன்பேரில் ராணுவ வீரர்கள் அங்கு விரைந்து சென்றனர். அப்போது வஜிரிஸ்தான் பகுதியில் சந்தேகப்படும்படி சுற்றித்திரிந்த 7 பயங்கரவாதிகளை ராணுவ வீரர்கள் சுட்டுக்கொன்றனர். இதனால் அங்கு பெரும் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டது.

## வடக்கு காசாவில் இஸ்ரேல் நடத்திய வான்வழி தாக்குதலில் 20 பேர் பலி



காசா, நவ.7

பாலஸ்தீனத்தின் காசா நகரை தங்களது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஹமாஸ் அமைப்பினருக்கு எதிராக இஸ்ரேல் கடந்த ஓர் ஆண்டாக போர் தொடுத்து வருகிறது. இந்த போரில் இதுவரை சுமார் 43 ஆயிரம் பேர் பலியாகி உள்ளனர். மனிதாபிமான அடிப்படையில் காசாவில் போரை நிறுத்த வேண்டுமென உலக நாடுகள் இஸ்ரேலை தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன. ஆனால் ஹமாஸ் அமைப்பை அடியோடு ஒழிக்கும் வரையில் போர் நிறுத்தம் என்ற பேச்சுக்கே இடமில்லை என கூறி வரும் இஸ்ரேல் காசா மீதான தாக்குதலை தொடர்ந்து தீவிரப்படுத்தி வருகிறது.

அந்த வகையில் கடந்த சில வாரங்களாக வடக்கு காசாவில் இஸ்ரேல் ராணுவம் வான்வழியாகவும், தரைவழியாகவும் தீவிரமான தாக்குதல்களை நடத்தி வருகிறது. இந்நிலையில், நேற்று பிற்பகுதியில் வடக்குகாசாவில் பெய்ட் லாஹியா நகரில் உள்ள ஒரு வீடு மீது இஸ்ரேல் நடத்திய வான்வழி தாக்குதலில் குறைந்தது 20 பேர் உயிரிழந்ததாக பாலஸ்தீன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். காசா சுகாதார அமைச்சகத்தின் அவசர சேவை வழங்கிய பட்டியலின்படி, இறந்தவர்களில் 8 பெண்கள் மற்றும் 6 குழந்தைகள் அடங்குவர். இந்த சம்பவம் தொடர்பாக இஸ்ரேலிய ராணுவத்திடமிருந்து உடனடி கருத்து எதுவும் வெளியாகவில்லை.

## ஜெர்மனி கைதி தூக்கு தண்டனைக்கு முன்பாக உயிரிழப்பு ஈரான் தகவல்



துபாய், நவ.7

ஈரானை சேர்ந்தவர் ஷம்ஜித் ஷர்மெத் (வயது 69). இவர் ஜெர்மனி குடியுரிமை பெற்றவர் ஆவார். அமெரிக்காவில் வசித்து வந்த ஷம்ஜித் ஷர்மெத் மீது ஈரான் அரசு பயங்கரவாத குற்றஞ்சாட்டியது. 2008ம் ஆண்டு மதவழிபாட்டுதலத்தில் நடைபெற்ற குண்டுவெடிப்பு தாக்குதலில் 14 பேர் உயிரிழந்தனர். இந்த தாக்குதலில் ஷம்ஜித் ஷர்மெத்திற்கு தொடர்பு இருப்பதாக ஈரான் குற்றஞ்சாட்டியது. மேலும், 2017ம் ஆண்டு டிவி விவாத நிகழ்ச்சியின்போது ஈரானின் ஏவுகணை அமைப்புகள் நிறுவப்பட்டுள்ள இடங்கள் குறித்த விவரத்தை கூறியதாக ஷம்ஜித் மீது ஈரான் குற்றஞ்சாட்டியது.

இதனிடையே, அமெரிக்காவில் ஐ.டி. நிறுவனம் நடத்தி வந்த ஷம்ஜித் ஷர்மெத் கடந்த 2020ம் ஆண்டு ஜூலை மாதம் வர்த்தக நிமித்தமாக இந்தியாவுக்கு வர திட்டமிட்டிருந்தார். இதற்காக அவர் அமெரிக்காவில் இருந்து விமானம் மூலம் துபாய் வந்தார். துபாயில் இருந்து இந்தியாவுக்கு செல்லும் இணைப்பு விமானத்திற்கு காத்திருந்த ஷம்ஜித்தை ஈரான் உளவுத்துறையினர் கடத்தி சென்றனர்.

துபாயில் இருந்து ஓமன் வழியாக ஷம்ஜித் ஈரான் கொண்டு செல்லப்பட்டார். கடத்தல் சம்பவம் அரங்கேறிய 2 நாட்களுக்கு பின் ஷம்ஜித்தை கைது செய்துவிட்டதாக ஈரான் அரசு தெரிவித்தது.

இதையடுத்து, ஷம்ஜித் மீது பயங்கரவாத வழக்கு நடைபெற்ற நிலையில் அந்த வழக்கில் கடந்த ஆண்டு அவருக்கு தூக்கு தண்டனை விதிக்கப்பட்டது. இதற்கு ஜெர்மனி, அமெரிக்கா, உள்பட பல்வேறு நாடுகளும் ஐ.நா. அமைப்பும் கண்டனம் தெரிவித்தன. இதனிடையே ஷம்ஜித்திற்கு தூக்கு தண்டனை நிறைவேற்றப்படும் என்று ஈரான் அரசு அறிவித்தது. ஷம்ஜித் ஷர்மெத்திற்கு சில நாட்களுக்கு முன் தூக்கு தண்டனையை நிறைவேற்ற அரசு தயாராகி வந்தது. இதற்கு ஜெர்மனி, அமெரிக்கா உள்பட பல்வேறு நாடுகள் கண்டனம் தெரிவித்தன. அதேவேளை, ஷம்ஜித்திற்கு தூக்கு தண்டனை நிறைவேற்றப்பட்டதை கண்டிக்கும் விதமாக ஈரானுக்கான தூதரை ஜெர்மனி திரும்பப்பெற்றது.

இந்தநிலையில், அந்நாட்டின் நீதித்துறையின் மிசான் செய்தி நிறுவனம் வெளியிட்ட செய்தியில், ஷம்ஜித் ஷர்மெத்திற்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. அவருக்கு மரண தண்டனையை நிறைவேற்ற அரசு தயாராக இருந்தபோது தண்டனையை நிறைவேற்றுவதற்கு முன்பாகவே அவர் உயிரிழந்துவிட்டதாக அந்நாட்டின் அரசு அதிகாரியான அஸ்கர் ஜஹாங்கீர் கூறியுள்ளதாக மேற்கோள்காட்டி உள்ளது. இது குறித்து அவர் விரிவாக கூறவில்லை என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஷம்ஜித் ஷர்மெத் உயிரிழந்ததையடுத்து ஜெர்மனியில் உள்ள மூன்று ஈரான் தூதரகங்களும் மூடப்பட்டன.

# தகவல் தொழில்நுட்ப கட்டிடத்தை முதலமைச்சர் திறந்து வைத்தார்



கோவை, நவ.7

தமிழகத்தில் அரசால் செயல்படுத்தப்படும் மக்கள் நலத்திட்டங்கள் பொதுமக்களுக்கு முறையாக கிடைக்கிறதா? அரசின் வளர்ச்சி பணிகள் சரியாக நடக்கின்றனவா? என்பதை மாவட்டம் வாரியாக சுற்றுப்பயணம் செய்து, நேரில் பார்வையிட்டு கள ஆய்வு மேற்கொள்ள போவதாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்து இருந்தார்.

அதன்படி தனது முதல் கள ஆய்வினை, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கோவையில் தொடங்கினார்.

இதற்காக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று காலை சென்னையில் இருந்து விமானம் மூலம் கோவை வந்தார். அங்கு அவருக்கு, அமைச்சர் செந்தில்பாலாஜி தலைமையில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. வரவேற்பை ஏற்றுக்கொண்ட அவர் அங்கிருந்து காரில் விளாங்குறிச்சிக்கு சென்றார்.

அங்குள்ள தகவல் தொழில்நுட்ப சிறப்பு பொருளாதார மண்டல வளாகத்தில் எல்காட் நிறுவனம் சார்பில் 3.94 ஏக்கர் பரப்பளவில், ரூ.114.16 கோடியில் 8 தளங்களுடன் புதிதாக தகவல் தொழில்நுட்ப கட்டிடம் கட்டப்பட்டு உள்ளது. அந்த கட்டிடத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்து பார்வையிட்டார்.

இந்த நிகழ்ச்சிகளில் அமைச்சர்கள் கே.என்.நேரு, எ.வ.வேலு, செந்தில்பாலாஜி, பழனிவேல் தியாகராஜன், டி.ஆர்.பி.ராஜா மற்றும் தலைமை செயலாளர் முருகானந்தம், கோவை தொகுதி எம்.பி. கணபதி ராஜ்குமார், கலெக்டர் கிராந்திகுமார், மாநகராட்சி கமிஷனர் சிவ குருபிரபாகரன், மேயர் ரங்கநாயகி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

பின்னர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பீளமேடு பகுதியில் உள்ள சுகுணா கல்யாண மண்டபத்திற்கு சென்று, அங்கு கள ஆய்வின் ஒரு பகுதியாக, வீட்டு வசதி வாரியம் சார்பில் நில எடுப்பு நடவடிக்கையில் விலக்கு அளிக்கப்பட்ட நில உரிமையாளர்களுக்கு நிலவிடுப்பு உத்தரவு ஆணையை வழங்குகிறார்.

## 2026 தேர்தலிலும் திமுக ஆட்சியை பிடிக்கும் துணை முதல்வர் பேச்சு





விழுப்புரம், நவ.7

விழுப்புரம் மாவட்டம் வரும் 2026 சட்டப்பேரவைத் தேர்தலில் நம்மை எதிர்த்து யார் களமிறங்கினாலும், எப்படிப்பட்ட கூட்டணிகள் அமைந்தாலும் அவர்களுக்கு தமிழ் மண்ணில் திமுகவுக்கு மட்டுமே வெற்றி கிடைக்குமென்று புரிய வைப்போம் என்றார் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின்.

விழுப்புரம் மாவட்டம், திருவெண்ணெய்நல்லூரில் செவ்வாய்க்கிழமை மாலை தெற்கு மாவட்ட திமுக சார்பில் நடைபெற்ற விழாவில், முன்னாள் முதல்வர் மு.கருணாநிதியின் வெண்கலச் சிலையை அக்கட்சியின் இளைஞரணிச் செயலரும், துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலின் திறந்துவைத்து பேசியது முன்னாள் முதல்வர் கருணா நிதியின் சிலையை திறந்து வைப்பது அவரது கொள்கையை, லட்சியத்தை, எழுத்தை மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும் என்பதற்காகத்தான் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திமுக ஆட்சியில் மகளிருக்கான கட்டணமில்லா பேருந்து பயணம், புதுமைப்பெண், தமிழ்ப் புதல்வன் உள்பட பல்வேறு மக்கள் நலத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. இதுபோன்று, 2023, செப்டம்பர் 15ஆம் தேதி செயல்படுத்தப்பட்ட கலைஞர்மகளிர்உரிமைத்தொகை திட்டத்தின் மூலம் தமிழகத்தில் 1.16 கோடி மகளிர் பயன்பெற்று வருகின்றனர். இந்தத் திட்டத்தில் சில குறைகள் இருப்பதாகத் தெரிவித்துள்ளனர். அந்த குறைகள் அனைத்தும் சரி செய்யப்பட்டு, விரைவில் தகுதியுள்ள அனைத்து மகளிருக்கும் மாதம் ரூ.1,000 உரிமைத் தொகை வழங்கப்படும் மக்களவைத் தேர்தலில் திமுக கூட்டணியை 40 தொகுதிகளிலும் வெற்றிபெறச்செய்ய வைத்தீர்கள். அதைத் தொடர்ந்து, விக்கிரவாண்டி சட்டப்பேரவைத் தொகுதி இடைத் தேர்தலிலும் திமுக வேட்பாளர் அன்னியூர் சிவாவை அதிகவாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற வைத்தீர்கள். திமுக அரசின் சாதனைத் திட்டங்கள் தொடர், 2026 சட்டப்பேரவைத் தேர்தலில் திமுக மீண்டும் வெற்றிபெற்று ஆட்சியில் அமரவேண்டும் முதல்வர் மு.க.ஸ்டாலின் மீண்டும் முதல்வராக மக்களவைத் தேர்தலில் திமுக வேண்டும் முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியதுபோன்று, 234 தொகுதிகளில் குறைந்தது 200 தொகுதிகளில் திமுக தலைமையிலான கூட்டணியை வெற்றிபெற வைக்க வேண்டும். 2026 சட்டப் பேரவைத் தேர்தலில் யாராக இருந்தாலும், நம்மை எதிர்த்து யார் களமிறங்கினாலும் எப்படிப்பட்ட கூட்டணிகள் அமைந்தாலும், அது டெல்லியிலிருந்து வந்தாலும் சரி, இங்கிருந்து வந்தாலும் சரி, தமிழ் மண்ணில் திமுகவுக்கு மட்டுமே வெற்றி கிடைக்குமென்று அவர்களுக்கு புரியவைப்போம். திமுக அரசின் திட்டங்கள் மூலம் பயன்பெற்றவர்கள் ஒவ்வொரு குடும்பத்திலும் ஒருவர் இருப்பர் அவர்களிடம் சென்று திமுக அரசின் சாதனைகளை கட்சியினர் எடுத்துக்கூற வேண்டும் என்றார் உதயநிதி ஸ்டாலின் விழாவுக்கு வனத்துறை அமைச்சர் க.பொன்முடி தலைமை வகித்து வரவேற்றார். மாவட்ட திமுக பொறுப்பாளர் பொன்.கௌதமசிகாமணி, எம்எல்ஏக்கள் இரா.லட்சுமணன், அன்னியூர் அ.சிவா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

## விபத்தில் உயிரிழந்த திண்டுக்கல் பெண் போலீஸ் உடலுக்கு 21 குண்டுகள் முழங்க அஞ்சலி





வேடசந்தூர், நவ.7

சென்னை மாதவரம் போலீஸ் நிலையத்தில் ஏட்டாக பணிபுரிந்தவர் நித்யா (வயது 35). இதே போலீஸ் நிலையத்தில் சப்இன்ஸ்பெக்டராக பணிபுரிந்த மதுரையைச் சேர்ந்த ஜெயஸ்ரீ (38) என்பவருடன் நேற்று மதுராந்தகம் அருகே ஒரு மோட்டார்சைக்கிளில் சென்று கொண்டு இருந்தனர்.

அப்போது சாலையில் தறிகெட்டு ஓடிய கார் இவர்கள் மீது மோதியதில் இருவரும் தூக்கி வீசப்பட்டு உயிரிழந்தனர்.

இதனைத் தொடர்ந்து விபத்தில் பலியான நித்யாவின் உடல் பிரேத பரிசோதனைக்கு பின்பு அவரது சொந்த ஊரான திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூர் அருகே உள்ள கொசவபட்டிக்கு இன்று காலை கொண்டு வரப்பட்டது. அங்கு மாவட்ட எஸ்.பி. பிரதீப் உத்தரவின் பேரில் சப்இன்ஸ்பெக்டர் செல்வம் தலைமையில் போலீசார் 21 குண்டுகள் முழங்க அஞ்சலி செலுத்தினர்.

விபத்தில் பலியான நித்யாவின் தந்தை சவுந்தர்ராஜன் இறந்து விட்டார். தாய் சரஸ்வதி (63) வேடசந்தூரில் உள்ள புகையிலை ஆராய்ச்சி மையத்தில் கூலித் தொழிலாளியாக பணியாற்றி ஓய்வு பெற்றவர்.

நித்யாவுக்கு 2 மூத்த சகோதரிகளும், ஒரு அண்ணனும் உள்ளனர். அனைவரும் திருமணமாகி தனித் தனியாக வசித்து வருகின்றனர். சிறு வயது முதலே போலீஸ் வேலையில் சேர வேண்டும் என்பது நித்யாவின் ஆசையாக இருந்துள்ளது. திண்டுக்கல்லில் உள்ள மகளிர் கல்லூரியில் பி.ஏ. தமிழ் இலக்கியம் படித்துள்ள நித்யா விளையாட்டு போட்டியிலும் ஆர்வம்கொண்டவராகஇருந்துள்ளார்.

கராத்தே, குத்துச்சண்டை உள்ளிட்ட போட்டிகளில் வெற்றி பெற்று பதக்கங்களை வாங்கி குவித்துள்ளார். 16 ஆண்டுகளாக காவல்துறையில் பணியாற்றி வந்த அவர் கடந்த 2016ம் ஆண்டு தேசிய அளவிலான குத்துச்சண்டை போட்டியில் முதலிடம் பிடித்து தங்க பதக்கம் பெற்றுள்ளார். திருமணமாகாமல் காவல் துறையில் தொடர்ந்து துடிப்பாக பணியாற்றி வந்த நித்யா விபத்தில் பலியான சம்பவம் அந்த கிராம மக்களையே சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

# மொடக்குறிச்சியில் விபத்து மோட்டார் சைக்கிள் மீது அரசு பஸ் மோதி பெண் பலி

ஈரோடு, நவ.7

ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி யூனியன் ஆபீஸ் அருகே பாரதி நகரை சேர்ந்தவர் அமரேஸ். கட்டிட தொழிலாளி. இவரது மனைவி ராணி (வயது 38). இவர்களுக்கு திருமணம் ஆகி 5 வயதில் ஒரு மகனும், ஒன்றரை வயதில் ஒரு மகனும் என 2 மகன்கள் உள்ளனர். தினமும் காலை ராணி தனது மோட்டார் சைக்கிளில் மூத்த மகனை பள்ளியில் கொண்டு விடுவது வழக்கம்.

வழக்கம் போல் ராணி தனது மகனை பள்ளியில் விடுவதற்காக அழைத்து கொண்டு மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தார். மொடக்குறிச்சி யூனியன் ஆபீஸ் மெயின் ரோடு அருகே சென்று கொண்டிருந்த போது வெள்ளகோவிலில் இருந்து ஈரோடு நோக்கி வந்து கொண்டிருந்த அரசு பஸ் ஒன்று எதிர்பாராத விதமாக ராணி ஓட்டி வந்த மோட்டார் சைக்கிள் மீது மோதியது.

இதில் சம்பவ இடத்திலேயே ராணி உடல் நசுங்கி பரிதாபமாக உயிரிழந்தார். 5 வயது குழந்தைக்கு வலது நெற்றியில் சிறிய காயம் மட்டும் ஏற்பட்டு அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினான். தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த மொடக்குறிச்சி போலீசார் ராணி உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். 5 வயது குழந்தையை சிகிச்சைக்காக ஆஸ்பத்திரிக்கு அழைத்து சென்றனர். பின்னர் விபத்து குறித்து மொடக்குறிச்சி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். ராணியின் உடலை பார்த்து அவரது கணவர் மற்றும் பெற்றோர் அழுதது பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# கஸ்தூரி மீது காவல் ஆணையர் அலுவலகத்தில் வீரலட்சுமி புகார்



சென்னை, நவ.7

நடிகை கஸ்தூரி மீது சென்னை காவல் ஆணையர் அலுவலகத்தில் வீரலட்சுமி புகார் அளித்துள்ளார். இது தொடர்பாக அவர் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்த போது கூறியதாவது:

நடிகை கஸ்தூரி சமூக வலைதளங்களிலும், தொலைக்காட்சிகளிலும் பெண்களை இழிவுபடுத்தி தொடர்ந்து பேசி வருகிறார். இரு சமூகங்களிடையே பிரிவினை வாதத்தை தூண்டும் வகையிலும் தெலுங்கு மொழி பேசும் பெண்களை இழிவுவாக பேசி தமிழ்நாட்டில் வாழுகின்ற தெலுங்கு மொழி பேசும் மக்களுக்கும் தமிழர்களிடையே மோதலை உருவாக்கும் விதமாக நடிகை கஸ்தூரி பேசி இருக்கிறார்.

நடிகை கஸ்தூரி சத்தியராஜ் படம் அமைதிப்படையில் தாயம்மாவாக நடித்தபோது இதுபோன்ற கருத்துக்களை பேசி இருந்தால் ஒரு பொண்ணு பேசுது என்று காது கொடுத்து கேட்டு இருப்பார்கள்.

நீ இப்போ ஆயம்மாவாக ஆனபின்பு தமிழ்நாட்டில் தொடர்ந்து தெலுங்கு மொழி பேசும் மக்களும் தமிழர்களும், சகோதர சகோதரிகளாக, ஒரு தாய் மக்களாக வாழ்ந்து கொண்டு இருக்கிறோம்.

ஆந்திராவில் 21 தமிழர்கள் சுட்டு படுகொலை செய்யப்பட்டபோது நடிகை கஸ்தூரி என்ன செய்து கொண்டிருந்தார்.

ஈழத்தில் 1 1/2 லட்சம் மக்களை கொன்று குவித்த போதும், பெண்கள் கற்பழிக்கப்பட்டபோதும், குழந்தைகள் கொன்று குவித்தபோதும் நடிகை கஸ்தூரி என்ன செய்து கொண்டிருந்தார்.

உரிமைகளுக்காக போராடாத நீ தமிழச்சியா?

கனிம வளம் கொள்ளையடிக்கப்பட்டபோது, அண்டை மாநிலத்தவர் தமிழர்களின் வேலை வாய்ப்பை பறித்தபோது இந்த மண்ணில் தமிழர்களாகிய நாங்கள் போராடிக்கொண்டிருக்கிறோம். எங்கோடு தெலுங்கு பேசும் மக்களும் களத்தில் நின்று போராடி சிறைக்கு போகிறார்கள்.

சீமான் அண்ணன் தெலுங்கு பேசும் மக்களை இழிவாக பேசியதற்காக, காவல் துறையில் புகார் அளிக்கப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

சீமான் கருத்து போல் தான் நடிகை கஸ்தூரியும் பேசிக்கொண்டு இருக்கிறார்.

சீமான் கருத்தும் நடிகை கஸ்தூரி கருத்தும் ஒரே மாதிரி தான் இருக்கிறது.

சீமானுக்கு கஸ்தூரி கிளாஸ்மேட்டா (Class mate) இல்லை glassmate...

சென்னை பெருநகர ஆணையர் அலுவலகத்தில் நடிகை கஸ்தூரி மீது புகார் அளித்துள்ளோம்.

பிரிவினை வாதத்தை தூண்டி, பொது அமைதிக்கு குந்தகம் விளைவிக்கும் நடிகை கஸ்தூரி மீது புகார் அளித்துள்ளோம்.

நடிகை கஸ்தூரி மீது காவல் துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறினார்.

# எடப்பாடி பழனிசாமி மனுவை ஏற்கக் கூடாது சிறப்பு கோர்ட்டில் தயாநிதி மாறன் மனுதாக்கல்



சென்னை, நவ.7

பாராளுமன்ற தேர்தலின் போது, மத்திய சென்னை தொகுதி தே.மு.தி.க. வேட்பாளர்பார்த்தசாரதியை ஆதரித்து பிரசாரம் செய்த அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, மத்திய சென்னை எம்.பி.யாக இருந்த தயாநிதி மாறன், தொகுதி மேம்பாட்டு நிதியை முறையாக செலவிடவில்லை என குற்றம் சாட்டினார்.

இந்த பேச்சுக்கு மறுப்பு தெரிவித்த தயாநிதி மாறன், எடப்பாடி பழனிசாமிக்கு எதிராக அவதூறு வழக்குத்தாக்கல் செய்திருந்தார். இந்த வழக்கு சென்னைமாவட்டகலெக்டர் அலுவலக வளாகத்தில் உள்ள எம்.பி., எம்.எல்.ஏ.க்கள். மீதான வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு கோர்ட்டில் விசாரணையில் உள்ளது.

இந்த வழக்கில் இருந்து விடுவிக்க கோரி எடப்பாடி பழனிசாமி தரப்பில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

அமலுக்கு வரும் முன்பே இந்த அவதூறு வழக்கு தாக்கல் செய்யப்பட்டு உள்ளது. அதனால், அவதூறு வழக்கில் இருந்து விடுவிக்க கோரி பி.என்.எஸ்.எஸ். சட்டத்தின் கீழ் எடப்பாடி பழனிசாமி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனுவை ஏற்றுக் கொள்ளக்கூடாது.

குற்றச்சாட்டுகள் குற்றம் சாட்டப்பட்டவருக்கு வாசித்து காட்டப்பட்டு விட்டதால், வழக்கில் இருந்து விடுவிக்க கோர முடியாது என்று மாறன்தரப்பில் பதில்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில், புதிய குற்றவியல் சட்டமான பாரதிய நகரிக் சுரக் ஷா சன்ஹிதா எனும் பி.என்.எஸ்.எஸ். இந்த மனு விசாரணைக்கு உகந்ததல்ல என ஆட்சேபம் தெரிவித்து, தயாநிதி மாறன்தரப்பில் பதில்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கூறியுள்ளார். இதையடுத்து, வழக்கு விசாரணையை டிசம்பர் 2ந்தேதிக்கு தள்ளிவைத்து நீதிபதி ஜி.ஜெயவேல் உத்தரவிட்டுள்ளார்.

# 4 மாவட்ட மக்களே உஷார்... வெளுத்து வாங்கப்போகும் கனமழை

சென்னை, நவ.7

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

மன்னார் வளைகுடா மற்றும் அதனை ஒட்டிய இலங்கை பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. தெற்கு வங்கக்கடலின் மத்திய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதனால் இன்று தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன்கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். தென்காசி, தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யவாய்ப்புள்ளது.

நாளை தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன்கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

7ந்தேதி கடலோர தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், உள்தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன்கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யவாய்ப்புள்ளது.

8ந்தேதி தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன்கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை, சிவகங்கை, ராமநாதபுரம், தேனி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், தென்காசி, திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யவாய்ப்புள்ளது.

9ந்தேதி தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன்கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை, சிவகங்கை, ராமநாதபுரம், விருதுநகர், தென்காசி, தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யவாய்ப்புள்ளது.

10ந்தேதி தென்தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், வடதமிழகத்தில் ஓரிரு இடங்களிலும் புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

11ந்தேதி தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் அடுத்த 24 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 32°33° செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 25°26° செல்சியஸை ஒட்டியும் இருக்கக் கூடும்.

அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 33° செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்சவெப்பநிலை 25°26° செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும்.

# அரசுப் பள்ளி மாணவி யோக ஸ்ரீ, ஆசிரியை மகேஸ்வரிக்கு வாழ்த்து தெரிவித்த கல்வி அமைச்சர்



சென்னை, நவ.7

பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

பள்ளிக் கல்வித்துறை அரசுப் பள்ளி மாணவர்களுக்காக என்ன செய்யும்?

கரூர் மாவட்டம் மணவாடி அரசு மேல்நிலைப் பள்ளி மாணவி யோக ஸ்ரீ. பாலவார்பட்டி கிராமத்தில் டைல்ஸ் ஒட்டும் தொழிலாளியின் ஒன்பதாவது படிக்கும் மகள்.

சிறுவயதிலேயே பாடும் திறமை இருப்பதை அம் மாணவியின் இரண்டாம் வகுப்பு ஆசிரியை கண்டறிந்து இத்தனை ஆண்டுகளாக தொடர்ந்து தன்னுடைய ஆதரவில் ஊக்கப்படுத்தி தனியார் தொலைக்காட்சி 'சரிகமப லிட்டில் சாம்பியன்ஸ்' மேடை ஏற்றி இருக்கிறார். பி சுசீலா பாடலையும், ஆஷா போன்ஸ்லே பாடலையும் பாடி அரங்கை திகைக்க வைத்திருக்கிறார்.

அவ்வளவு பெரிய மேடையை எத்துணை இலகுவாக முதிர்ச்சியாக கையாண்டார் யோக ஸ்ரீ.


அரசுப்பள்ளி மாணவர்களுக்காக தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறை ஆண்டு தோறும் நடத்தும் கலைப் போட்டிகளில் கரூர் மாவட்டம் சார்பாக பங்கேற்று அங்கு வந்திருந்த ஆசிரியர்களையும் மாணவர்களையும் ஆச்சரியப்படைத்தி இருக்கிறார் யோக ஸ்ரீ.

பள்ளிக் கல்வித்துறை மூன்றாண்டுகளாக விதைத்த விதைகள் சிறப்பானபலனைதரத்தொடங்கியிருக்கின்றன.

மணவாடி அரசுப் பள்ளி ஆசிரியை மகேஸ்வரி நல்லாசிரியர் விருதுக்கு தகுதியானவர்.

மகேஸ்வரிகளால் ஆசிர்வதிக்கப்பட்டவைகள் அரசுப்பள்ளிகள் என்று தெரிவித்துள்ளார்.

# 8 மாத குழந்தையின் நுரையீரலில் சிக்கியிருந்த எல்இடி லைட் அகற்றம் மருத்துவர்களுக்கு பாராட்டு



மதுரை, நவ.7

திண்டுக்கல் மாவட்டம் குட்டத்துப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த ஒரு தம்பதியின் 8 மாத பெண் குழந்தைக்கு இருமல், மூச்சுத்திணறல் மற்றும் காய்ச்சல் அறிகுறிகளுடன் சிகிச்சைக்காகதிண்டுக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு கடந்த 28ந்தேதி அனுமதிக்கப்பட்டார்.

4 நாட்கள் சிகிச்சை பெற்றுவந்த நிலையில், குழந்தைக்கு மூச்சுத்திணறல் அதிகமாக இருந்தது. எக்ஸ்ரே எடுத்து பார்த்ததில் நுரையீரலில் சிறிய கொண்டை ஊசி போன்ற பொருள் சிக்கியிருப்பது தெரியவந்தது.

மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு கடந்த 1ந்தேதி அனுப்பி வைக்கப்பட்டார். குழந்தைகள் அறுவை சிகிச்சை பகுதியில் அனுமதிக்கப்பட்ட குழந்தைக்கு இடது நுரையீரலில் மூச்சு குழாயில் இரும்பு ஊசி போன்ற பொருள் சிக்கி உள்ளது ஸ்கேன் பரிசோதனை மருத்துவர்களால் கண்டறியப்பட்டது.

8 மாதமே ஆன சிறிய குழந்தைக்கு நுரையீரலில் சிக்கியுள்ள இரும்பு ஊசி போன்ற பொருளை அகற்றுவதற்கு பிராங்கோஸ்கோப்பி எனப்படும் நுரையீரல் அக நோக்கி சிகிச்சை செய்வதும், அறுவை சிகிச்சை செய்வதும், மயக்க மருந்து கொடுப்பதும் சிக்கலானது.

ஆகவே குழந்தையின் உயிருக்கு ஆபத்து ஏற்படாத வகையிலும், நுரையீரல் மேலும் பாதிப்பு ஏற்படாத வகையிலும் இரும்பினால் ஆன அந்த பொருளை அகற்றுவதற்கு நுரையீரல் சிறப்பு மருத்துவர்கள், குழந்தைகள் அறுவை சிகிச்சை மருத்துவர்கள் மற்றும் மயக்க மருந்து நிபுணர்கள் கொண்ட குழு அமைக்கப்பட்டது.

அவர்கள் சிறிய அளவிலான பிராங்கோஸ்கோப்பி எனப்படும் நுரையீரல் அக நோக்கி சிகிச்சையின் மூலம் பாதுகாப்பாக குழந்தையின் இடது பக்க நுரையீரல் சிக்கி இருந்த அந்தப்பொருளை அகற்றினர்.

அகற்றிய பின் பார்த்த போது அவை குழந்தைகள் விளையாடும் ரிமோட் கண்ட்ரோல் காரின் எல்.இ.டி. லைட் என உறுதி செய்யப்பட்டது. இச்சிகிச்சைக்கு பின்னர் குழந்தை பூரண நலம் பெற்று நேற்று டிஸ்சார்ஜ் செய்யப்பட்டார்.

இந்த சிக்கலான சிகிச்சையை வெற்றிகரமாக செயல்படுத்திய மருத்துவக் குழுவை சேர்ந்த நுரையீரல் சிறப்பு மருத்துவர் ராஜேஷ்குமார், குழந்தைகள் அறுவை சிகிச்சை மருத்துவர்கள் ஸ்ரீனிவாசகுமார், கருப்பசாமி, மயக்க மருந்து நிபுணர்கள் சிவக்குமார், பிரமோத் ஆகியோர் அடங்கிய மருத்துவக் குழுவை அரசு ராஜாஜி மருத்துவமனை முதல்வர் டாக்டர் அருள் சுந்தரேஷ் குமார் பாராட்டினார்.

மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனை முதல்வர் சுந்தரேஷ் குமார் கூறுகையில், சிறு குழந்தைகள் கையில் கிடைக்கும் பொருள்களை வாயில் வைத்து விளையாடும்போது அவற்றை விழுங்கவோ அல்லது நுரையீரல் மூச்சுக்குழாயில் சிக்கிக் கொள்ளவோ வாய்ப்புள்ளது. எனவே பெற்றோர்கள், குழந்தைகள் விழுங்க வாய்ப்புள்ள சிறு பொருட்களை குழந்தைகளுக்கு விளையாட அனுமதிக்க கூடாது. குழந்தைகளுக்கு இருமல் மற்றும் மூச்சு திணறல் தொடர்ந்து இருக்கும் பட்சத்தில் உரிய மருத்துவ சிகிச்சை எடுத்துக் கொள்ள வேண்டும். குழந்தைகள்சிறு பொருட்களை விழுங்கி இருக்கலாம் என சந்தேகப்பட்டால் உடனே மருத்துவமனை அணுகி மருத்துவரிடம் தெரிவித்து சிகிச்சை எடுத்துக் கொள்வதால் உயிருக்கு ஏற்படும் பாதிப்பு ஏற்படாமல் தடுக்கலாம் என்றும் கூறினார்.

# ஓ.பன்னீர்செல்வம் அணியினர் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் மீது தருமபுரி எஸ்.பி. அலுவலகத்தில் புகார்




தருமபுரி, நவ.7

அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் உதயகுமார் அத்துமீறி அவதூறாக பேசி சட்ட ஒழுங்குப் பிரச்சனை ஏற்படுத்தி வருவதாகவும், அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அ.தி.மு.க. தொண்டர்கள் உரிமை மீட்பு குழு தருமபுரி மாவட்ட செயலாளர் குமார் தலைமையில் நேற்று எஸ்.பி. அலுவலகத்தில் மனு அளித்தனர்.

அ.தி.மு.க.வை சேர்ந்த முன்னாள் அமைச்சர் உதயகுமார் கடந்த 24ந்தேதியன்று மதுரையில் செய்தியாளர் சந்திப்பின் போது, அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமியின் ஆணையைப் பெற்று ஓ.பன்னீர்செல்வத்தின் வீட்டை நேரிலேயே வந்து முற்றுகையிட்டு அவர் எங்கும் நடமாட முடியாத ஒரு நிகழ்வை தமிழகத்தில் அவர் சந்திக்க தயாராக இருக்க வேண்டும் என பதை எச்சரிக்கை தெரிவித்துக் கொள்கிறேன் என்று கூறி உள்ளார்.

இதில் இருதரப்புக்கும் இடையே மோதலை உருவாக்கிட சட்ட ஒழுங்கு பிரச்சனை ஏற்படுத்தும் வகையில் பேசி உள்ளார்.

மேலும் முன்னாள் முதலமைச்சர் பன்னீர்செல்வம் உயிருக்கு அச்சுறுத்தல் விடுத்து வருகிறார்.

உதயகுமாரின் இந்த செயல்பாட்டால் பொது அமைதிக்கும் கட்சியின் மதிப்பிலும், தொண்டர்கள் மத்தியிலும் பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டு மோதல் உருவாகும் சூழல் ஏற்பட்டுள்ளது.

எனவே அரசியல் அமைப்பு சட்டத்திற்கு எதிராகவும் பொது அமைதிக்கு பங்கம் விளைவிக்கும் வகையிலும் பேசி செயல்பட்டு வரும் உதயகுமார் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் இவ்வாறு மனுவில் தெரிவித்தனர்.

# சாலை வசதி கேட்டு தருமபுரி கலெக்டர் அலுவலகம் முன்பு கிராம மக்கள் திடீர் தர்ணா



தருமபுரி, நவ.7

தருமபுரி மாவட்டம், பென்னாகரம் அடுத்த வட்டவன ஹள்ளி ஊராட்சிக் கோட்டூர் மலை கிராமத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசித்து வருகின்றனர். இங்கு முறையான சாலை வசதி இல்லாமல், அத்தியாவசிய தேவைகளுக்கு கழுதை மூலம் பொருட்கள் எடுத்துச் செல்லப்படுகிறது.

மேலும் அரசு பள்ளிக்கு ஆசிரியர்கள் வருவதில்லை. சாலை வசதி இல்லாததால் மேற்படிப்புக்கு மலை கிராமத்தில் இருந்து அப்பகுதி குழந்தைகள் செல்ல முடியாமல் படிப்பை பாதியில் நிறுத்தி நின்று விடுகின்றனர்.

வனப்பகுதியில் இருப்பதால் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு சாலை அமைக்க வனத்துறையிடம் அனுமதி பெறப்பட்டது. ஆனால் இதுவரை சாலை வசதி ஏற்படுத்தி தரவில்லை. இதனால் மலை கிராம மக்கள் 100க்கும் மேற்பட்டோர் சாலை வசதி கேட்டு ஆதார், வாக்காளர் அடையாள அட்டை, குடும்பஅட்டை உள்ளிட்ட அரசு ஆவணங்களுடன் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் ஒப்படைத்து மனு கொடுக்க வந்திருந்தனர். அப்பொழுது போலீசார் 5 பேர் மட்டுமே மாவட்ட கலெக்டரை சந்திக்க உள்ளே செல்ல வேண்டும் என தெரிவித்தனர்.

ஆனால் எல்லோரையும் விட வேண்டும் என மலை கிராம மக்கள் தெரிவித்து, வாக்குவாதம் செய்து, நுழைவாயிலில் திடீரென தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனைத் தொடர்ந்து 10 பேர் மட்டும் உள்ளே சென்று மனு கொடுத்தனர். மனுவை பெற்றுக் கொண்டு சாலை அமைக்க விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என கலெக்டர் சாந்தி உறுதி அளித்தார். கிராம மக்கள் கலெக்டர் அலுவலகம் முன்பு திடீரென்று தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டதால் அந்த பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்படுத்தியது.

# குன்னூரில் தொடரும் கனமழை: 30 வீடுகள் இடிந்து சேதம் இருளில் மூழ்கிய 25 கிராமங்கள்

அருவங்காடு, நவ.7

நீலகிரி மாவட்டம் குன்னூரில் கடந்த சில தினங்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. இரவில் மட்டும் கனமழை பெய்து வருவதால் பொதுமக்கள் தூக்கத்தை இழந்து தவிக்கும் நிலை நீடிக்கிறது.

பெரிய அளவில் மழை இல்லை. சாரல் மழை மட்டுமேபெய்தது.தொடர்ந்து இரவு 8 மணியளவில் இடி மின்னலுடன் கூடிய கனமழை பெய்தது. குறிப்பாக குன்னூரில் மட்டும் 11 செ.மீ. கனமழை கொட்டி தீர்த்தது. இதனால் குன்னூரின் பெரும்பாலான பகுதிகளில் வெள்ளநீர் கரைபுரண்டோடியது. மேலும் வானில் மேகமூட்டத்துடன் குளிர் காற்றும் தொடர்ந்து வீசுவதால் பொதுமக்கள் வீடுகளுக்குள் முடங்கி உள்ளனர்.

இதற்கிடையே நேற்று இரவு 10 மணிமுதல் இன்று காலைவரை குன்னூர் நகரம் மற்றும் சுற்று வட்டாரபகுதிகளில்சுமார் 25க்கும் மேற்பட்ட கிராமங்களில் மின்தடை ஏற்பட்டு ஒட்டுமொத்த பகுதிகளும் இருளில் மூழ்கியதால் மக்கள் கடும்



அவதிக்கு உள்ளாகினர்.

குன்னூர் அருகே உள்ள சின்னாளக்கொம்பை, குரங்குமேடு ஆகிய பகுதியிலுள்ள வீடுகள் கனமழையால் சேதம் அடைந்தன. மேலும் மழைவெள்ளமும் வீட்டுக்குள் புகுந்ததால் அப்பகுதி மக்கள் பாதிப்படைந்தனர்.

இதேபோல மேல்பாரதி நகர், கெரடாலீஸ், மகாலிங்க காலனி, காந்திபுரம், சித்தி விநாயகர் கோவில் தெரு உள்ளிட்ட பல இடங்களில் சுமார் 30க்கும் மேற்பட்ட வீடுகள் முழுமையாகவும், பகுதியாகவும் இடிந்து சேதம் அடைந்து உள்ளன. மேலும் பெரும்பாலான பகுதிகளில் தடுப்புச்சுவர் இடிந்ததால் அங்குள்ள குடியிருப்புகள் அந்தரத்தில் தொங்குகின்றன.

அங்கு குடியிருந்த மக்கள் உடனடியாக வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடத்தில் தங்க வைக்கப்பட்டு உள்ளனர். குன்னூர் பெட்போர்டு பகுதியில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பை ஒட்டி ராட்சத தடுப்புசுவர் திடீரென சரிந்து விழுந்ததில், அங்குள்ள வீடுகளுக்குள் மழைநீர் புகுந்தது.

குன்னூர் மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் சாலையோரங்களில் மண் சரிவு மற்றும் மரங்கள் வேரோடு சாய்வதால் ஏற்படும் பாதிப்புகளை வருவாய்,

நெடுஞ்சாலை மற்றும் போலீசார் அகற்றி வருகின்றனர்.மேலும் மழையால் பாதிக்கப்பட்டுள்ள குன்னூர் சித்தி விநாயகர் கோயில் தெருவை சேர்ந்த குழந்தைகள் உட்பட 9 பேர் வெஸ்லி சர்ச்சில் தங்க வைக்கப்பட்டு உள்ளனர்.

குன்னூர் மேல்பாரதி நகர் பகுதியில் பாதிக்கப்பட்ட 8 பேர் அங்குள்ள சமுதாய கூடத்தில் தங்க வைக்கப் பட்டு உள்ளனர். கனமழையால் பாதிக்கப்பட்டு தங்க வைக்கப்பட்டு உள்ள அனைவருக்கும் உணவு உள்ளிட்ட அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டு உள்ளதாகவும், குன்னூர் தாலுகாவில் பொதுமக்களுக்காக 150 தற்காலிக நிவாரண முகாம்கள் தயாராக உள்ளதாகவும் தாசில்தார் கனிசுந்தரம் தெரிவித்து உள்ளார்.

குன்னூர் பகுதியில் தொடர்ந்து மேகமூடத்துடன் சாரல்மழை நீடித்து வருவதால் வாகனஓட்டிகள் பாதுகாப்பாக செல்ல வேண்டுமென போலீசாரும் வேண்டுகோள் விடுத்து உள்ளனர்.

குன்னூர் சுற்றுவட்டார பகுதியில் 24 மணி நேரத்தில் பெய்த மழைஅளவு விவரம் வருமாறு (மில்லி மீட்டரில்): கேத்தி21 மி.மீ., பரளியார்30 மி.மீ., குன்னூர் ரூரல்45 மி.மீ., எடப்பள்ளி55 மி.மீ, பில்லிமலை4.2 மி.மீ. மழை பதிவாகி உள்ளது.

# ஒரே மேடையில் விஜய் உடன் பங்கேற்பா? விளக்கம் அளித்த திருமாவளவன்

கே.கே.நகர், நவ.7

விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல்.திருமாவளவன்எம்.பி.திருச்சி விமான நிலையத்தில் நிருபர்களிடம் கூறியதாவது:

பஞ்சமி நிலம் தொடர்பான பிரச்சனை குறித்து முன்பு கருணாநிதி தலைமையில் குழு அமைக்கப்பட்டது. அந்தக்குழு மீண்டும் இயங்க வேண்டும் என்பது தெரிவித்துள்ளோம். தற்போது கட்சியின் மறுசீரமைப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறோம். தமிழகத்தில் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் மாவட்ட செயலாளர் நியமிக்க முடிவு எடுத்துள்ளோம்.

ஏற்கனவே 144 மாவட்ட செயலாளர்களை நியமித்து ஓராண்டு கடந்திருக்கிறது. கட்சியை பலப்படுத்த வேண்டும் என்ற அடிப்படையில் நுண்ணிய அளவில்வரைமுறை செய்து ஏராளமான பொறுப்பாளர்கள் நியமனம் செய்ய முடிவு எடுத்துள்ளோம்.

இப்போது கூட்டணி தொடர்பாக பேசுவதற்கு எந்த தேவையும் எழவில்லை. ஏற்கனவே நாங்கள் 7 ஆண்டுகளாக தொடர்ந்து தி.மு.க. கூட்டணியில் இருந்து வருகிறோம். அகில இந்திய அளவில் இந்தியா கூட்டணியில் ஒரு அங்கமாக உள்ளோம். 2 கூட்டணிகளை உருவாக்கியதில் விடுதலைச் சிறுத்தைகளுக்கு பங்கு உண்டு.





நாங்கள் உருவாக்கிய கூட்டணிகளை மேலும் பலப்படுத்த வேண்டும். முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்பதுதான் என்னுடைய கவனம் இருக்கிறது. இந்த கூட்டணிகளை விட்டுவிட்டு இன்னொரு கூட்டணிக்கு செல்ல வேண்டும் என்ற தேவையில்லை.

ஏற்கனவே பலமுறை நான் சுட்டிக்காட்டி உள்ளேன். திட்டமிட்டு விடுதலை சிறுத்தைகள் மீது சந்தேகத்தை ஏற்படுத்துகிற முயற்சியில் சில ஈடுபட்டு வருகின்றனர். நாங்கள் எடுத்த நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளோம். மதசார்பற்ற கூட்டணி உருவாக்கியதில் எங்களுக்கு பங்கு உண்டு. அது எங்கள் கூட்டணி.

எங்களுக்கான கூட்டணியை சிதைக்க வேண்டிய தேவை விடுதலை சிறுத்தைகளுக்குஇல்லை.

2026ம் ஆண்டில் நடைபெறும் சட்டமன்ற தேர்தலிலும் எங்கள் கூட்டணி தொடரும்.

புத்தக வெளியீட்டு விழாவில் பங்கேற்க சம்மதம் தெரிவித்து ஓராண்டு ஆகிறது. இதில் பங்கேற்க ராகுல் காந்தியையும் அழைப்பதாகதிட்டமிட்டு இருந்தனர். சில வாரங்களுக்கு முன்பு ரஜினிகாந்தையும் அழைக்கலாம் என தகவல் சொன்னார்கள். தமிழக வெற்றிக்கழக மாநாட்டுக்கு முன்பாக விஜய்யை அழைக்கலாம் என தெரிவித்திருந்தனர். அதற்கும் நான் இசைவு தெரிவித்திருந்தேன். தற்போதைய சூழ்நிலையில் புத்தக வெளியீட்டு விழாவில் பங்கேற்பது குறித்து கட்சி நிர்வாகிகளுடன் ஆலோசித்து முடிவு செய்யப்படும்.

திராவிடத்தைப் பற்றி ஏற்கனவே கருத்து சொல்லி உள்ளேன். பெரியாருக்கு முன்னதாகவே இந்த தமிழ் மண்ணில் திராவிடம் குறித்து பேசப்பட்டுள்ளது. சைவ எழுச்சி எழுந்த போது ஆரிய எதிர்ப்பு உண்டானது. அப்போது திராவிடர் என்று சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

திராவிடம் கருத்தியல் இல்லை என்றால் சனாதன நம்மை விழுங்கி இருக்கும். இந்தி தமிழை விழுங்கி இருக்கும்.

திராவிட கருத்தியல் இல்லாமல் இருந்தால் சமஸ்கிருதம் தமிழை விழுங்கி இருக்கும். தமிழர் இனம் இருக்கிறோம் என்றால் பாதுகாப்பு காரணம் திராவிட கருத்தியல் தான். ஆனால் திராவிட எதிர்ப்பை திராவிட அரசியல் எதிர்ப்பாக மாற்றுகிறார்கள்.

இவ்வாறு அவர் கூறினார்.

# திருப்பூர் கலெக்டர் அலுவலகம் முன்பு அங்கன்வாடி ஊழியர்கள் 2வது நாளாக காத்திருப்பு போராட்டம்

திருப்பூர், நவ.9

திருப்பூர் மாவட்டத்தில் அங்கன்வாடி ஊழியர்களுக்கு கலெக்டர் வழங்கிய பணியிட மாறுதல் ரத்து செய்யப்பட்டதை கண்டித்து தமிழ்நாடு அங்கன்வாடி ஊழியர் மற்றும் உதவியாளர் சங்கம் (சி.ஐ.டி.யு.) சார்பில் காத்திருப்பு போராட்டம் நேற்று மாலை திருப்பூர் கலெக்டர் அலுவலகம் முன் தொடங்கியது. இன்று 2வது நாளாக போராட்டம் நீடிக்கிறது.

போராட்டத்திற்கு சங்கத்தின் மாவட்ட தலைவர் சித்ரா தலைமை தாங்கினார். அங்கன்வாடி ஊழியர்களுக்கு அக்டோபர் மாதம் 1ந் தேதி கலெக்டர் பணியிட மாறுதல் வழங்கினார். அந்த ஆணை அடுத்த ஒருவாரத்தில் ரத்து செய்யப்பட்டது.



மேலும் அவர்களுக்கான மாத ஊதியமும் வழங்கப்படவில்லை. எனவே பணியிட மாறுதல் செய்யப்பட்ட இடத்துக்கே மீண்டும் பணி வழங்க வேண்டும்.

கூடுதல் பொறுப்பு பார்த்த அங்கன்வாடி ஊழியர்களுக்கு ஊதியம் பிடித்தம் செய்த தொகையை வழங்க வேண்டும். காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டம் நடைபெறுகிறது. இதில் அங்கன்வாடி ஊழியர்கள் திரளாக பங்கேற்றுள்ளனர். மேலும் அங்கேயே உணவு சமைத்து சாப்பிட்டுவருகின்றனர். அவர்களுடன் ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டு திட்ட அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர். இன்று காலை திருப்பூரில் வெயிலும், மழையுமாக இருந்தது. எனவே பலர் குடைகளை பிடித்தப்படி போராட்டத்தில் பங்கேற்றனர்.

# சீமானால் உயிருக்கு ஆபத்து: திருச்சி சூர்யா கோர்ட்டில் மனு

சென்னை, நவ.7

நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான், சாட்டை துரைமுருகனால் தனது உயிருக்கு ஆபத்து இருப்பதாக திருச்சி சூர்யா ஐகோர்ட்டில் மனு தாக்கல் செய்துள்ளார். அதில் தனக்கும் தனது குடும்பத்தினருக்கும் பாதுகாப்பு வழங்க வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளார்.

மேலும் சாட்டை துரைமுருகன் என்பவரும் எனக்கு மிரட்டல் விடுக்கும் வகையில் வீடியோக்களை பதிவிட்டு வருகிறார் என்று திருச்சி சூர்யா மனு அளித்துள்ளார்.

திருச்சி சூர்யா அளித்த மனுவின் விசாரணையை வருகிற 7ந்தேதிக்கு ஒத்தி வைத்து மதுரை கிளை கோர்ட் உத்தரவிட்டுள்ளது.

சீமான் குறித்து 15 ஆடியோக்கள் பதிவேற்றம் செய்ததால் பழிவாங்கும் நோக்கோடு செயல்படுவதாகவும் மனுவில் திருச்சி சூர்யா குறிப்பிட்டுள்ளார்.

தி.மு.க. மூத்த தலைவரும், அக்கட்சியின் மாநிலங்களவை உறுப்பினருமான திருச்சி சிவாவின் மகன் திருச்சி சூர்யா என்பது குறிப்பிடத்தக்கது.


# தென்கிழக்கு வங்கக்கடலில் புதிய புயல் சின்னம்: 7ந்தேதி உருவாக வாய்ப்பு

சென்னை, நவ.7

தென்கிழக்கு வங்கக்கடலில் அந்தமான் தீவுகள் அருகே நாளை மறுநாள் (7ந்தேதி) புதிய புயல் சின்னம் உருவாக வாய்ப்பு உள்ளது. இதுகுறித்து சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:

தென்கிழக்கு வங்கக்கடலில் அந்தமான் தீவுகள் அருகே வருகிற 7ந்தேதி புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாக வாய்ப்பு உள்ளது. இது புயல் சின்னமாக வலுவடைந்து தமிழக கரையை நெருங்கலாம்.

தமிழகத்தில் தெற்கு மற்றும் மேற்கு மாவட்டங்களில் பரவலாக கனமழை பெய்து வருகிறது. நேற்று காலை 8.30 மணி வரையிலான 24 மணி நேரத்தில், அதிகபட்சமாக கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம், பில்லூர் அணை பகுதியில் 12 செ.மீ. மழை பதிவாகி உள்ளது. அதற்கு



அடுத்தபடியாக, நீலகிரி மாவட்டம் குன்னூரில் 11 செ.மீ. மழையும், பல இடங்களில் 10 செ.மீ. மழையும் பதிவாகி உள்ளது.

தென்கிழக்கு வங்கக்கடலில், ஒரு வளி மண்டல சுழற்சி நிலவுகிறது. இதேபோல், தென்தமிழகம் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது.

இதன் காரணமாக தமிழகத்தில் இன்று முதல் 6 நாட்களுக்கு ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் மழை பெய்யக் கூடும். வருகிற 8ந்தேதி முதல் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் கனமழை பெய்யலாம்.


செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, ராமநாதபுரம் மாவட்டங்களில் வருகிற 8 மற்றும் 9ந்தேதிகளில் கனமழை பெய்யலாம்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில், அடுத்த 2 நாட்களுக்கு வானம் ஓரளவு மேகமூட்டமாக காணப்படும். ஒரு சில இடங்களில் லேசான அல்லது மிதமான மழை பெய்யலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# குற்றாலத்தில் காலை முதல் குளிக்க அனுமதி

நெல்லை, நவ.7

நெல்லை, தென்காசி, தூத்துக்குடியில் வடகிழக்கு பருவமழை பரவலாக பெய்து வருகிறது. நேற்று தென்காசி, தூத்துக்குடி மாவட்டங்களில் கனமழை வெளுத்து வாங்கியதால் குளிர்ச்சியான சூழ்நிலை நிலவி வருகிறது. இதனால் பொதுமக்களும், விவசாயிகளும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.



தென்காசி மாவட்டத்தில் சில நாட்களாகவே மேற்கு தொடர்ச்சி மலையையொட்டி அமைந்துள்ள பகுதிகளில் பரவலாக பெய்து வரும் மழை காரணமாக அணைகளின் நீர்மட்டம் கணிசமாக உயர்ந்து வருகிறது. அந்த வகையில் 84 அடி கொள்ளவு கொண்ட ராமநதி அணை மற்றும் 85 அடி கொண்ட கடனா அணைகளின் நீர்பிடிப்பு பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது.

நேற்றும் ராமநதி அணை பகுதியில்15மில்லிமீட்டர் மழை பதிவாகியது. இதனால் நீர்வரத்து அதிகரித்து அந்த அணை நீர்மட்டம் ஒரே நாளில் 1½அடி உயர்ந்து 59 அடியை எட்டியது. கடனா அணை நீர்பிடிப்பு பகுதியில் 20 மில்லிமீட்டர் மழை பெய்தது.

அந்த அணையின் நீர்மட்டம் 42 அடியாக உள்ளது. கருப்பாநதி அணை பகுதியில் மழை எதுவும் பதிவாகவில்லை. அந்த அணையில் 48.23 அடி நீர் இருப்பு உள்ளது.

மாவட்டத்தில் தென்காசி நகர் பகுதி மற்றும் அதனை ஒட்டி அமைந்துள்ள செங்கோட்டை, ஆய்க்குடி சுற்றுவட்டாரத்தில் பரவலாக மழை பெய்தது.

ஆய்குடியில்பிற்பகலில் பெய்த மழையால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. அங்கு 17 மில்லிமீட்டர் மழை பெய்துள்ளது. சங்கரன்கோவில் சுற்றுவட்டாரத்தில் விட்டு விட்டு சாரல் அடித்தது.

மேற்கு தொடர்ச்சி மலையில் நேற்று பெய்த கனமழை காரணமாக குற்றாலத்தில் அனைத்து அருவிகளிலும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதனால் சுற்றுலா பயணிகள் குளிக்க அனுமதிக்கப்பட வில்லை. இரவு முழுவதும் தொடர்நீர்வரத்தால் தடை நீட்டிக்கப்பட்டது.

இந்நிலையில் இன்று காலை மழை குறைவால் நீர்வரத்தும் குறைய தொடங்கியது. இதனால் மெயினருவி, ஐந்தருவி, பழைய குற்றாலம் அருவிகளில் குளிக்க சுற்றுலாப் பயணிகளுக்கு மீண்டும் அனுமதி வழங்கப்பட்டது.

தூத்துக்குடி மாவட்டத்தில் நேற்று கனமழை வெளுத்து வாங்கியது. குறிப்பாக கழுகுமலை, கடம்பூர், கயத்தாறு மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் மணிக்கணக்கில் கனமழை கொட்டியது. விளாத்திகுளத்திலும் கனமழை கொட்டி தீர்த்தது. இதனால் சாலைகளில் வெள்ளம் பாய்ந்தோடியது.

அந்த பகுதிகளில் உள்ள குளங்களுக்கும் நீர் வரத்து ஏற்பட்டது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். அதிகபட்சமாக கழுகுமலை, விளாத்திகுளம் மற்றும் கடம்பூரில் தலா 4 சென்டிமீட்டர் மழை பதிவாகியது.

திருச்செந்தூர், காயல்பட்டினம், ஸ்ரீவைகுண்டம் மற்றும் அதன் சுற்றுவட்டார கிராமங்களிலும் நேற்று பகல் முழுவதும் விட்டு விட்டு மழை பெய்து கொண்டே இருந்தது. தாழ்வான இடங்களில் மழைநீர் தேங்கியது. இதனால் வாகனங்கள் சாலைகளில் ஊர்ந்தபடி சென்றன. திருச்செந்தூரில் 24 மில்லிமீட்டரும், காயல்பட்டினத்தில் 20 மில்லிமீட்டரும் மழை பெய்துள்ளது.

கோவில்பட்டி, எட்டயபுரம், வைப்பாறு, சூரன்குடி, காடல்குடி, வேடநத்தம் பகுதிகளிலும் பெய்த மழையால் பூமி குளர்ச்சியானது. மக்களும் மகிழ்ச்சி அடைந்தனர். ஓட்டப்பிடாரம், மணியாச்சி ஆகிய இடங்களில் லேசான சாரல் அடித்தது. மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை பரவலாக பெய்வதால், நெல், பயிறு வகைகள் பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

நெல்லை மாவட்டத்தில் கன்னடியன்கால்வாய் பகுதியில் கனமழை கொட்டியது. அங்கு 29 மில்லிமீட்டர் மழை பெய்தது. கொடுமுடியாறு அணை நீர்பிடிப்பு பகுதிகளில் 28 மில்லிமீட்டரும், நம்பியாறில் 8 மில்லிமீட்டரும் மழை பெய்துள்ளது.

களக்காடு தலையணை, மணிமுத்தாறு அருவி, அகஸ்தியர் அருவிகளில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டி வருகிறது. பாபநாசம் அணை நீர்பிடிப்பு பகுதியில் 4 மில்லிமீட்டர் மழை பதிவாகியது. புறநகர்பகுதிகளில் மழை பெரிதாக பெய்யவில்லை. மாநகர் பகுதியில் மட்டும் சில மணி நேரம் விட்டு விட்டு மழை பெய்தது.

அணைகளை பொறுத்தவரை பிசான பருவ நெல் சாகுபடி பணிக்காக பிரதான அணையான பாபநாசம் அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்படுவதால் அணையின் நீர்மட்டம் குறைந்து வருகிறது.

அந்த அணை நீர்மட்டம் நேற்று 93.50 அடியாக இருந்த நிலையில் தற்போது 92.80 அடியாக குறைந்துள்ளது. அணைக்கு வினாடிக்கு 400 கனஅடி நீர் வந்து கொண்டிருக்கிறது. அணையில் இருந்து பாசனத்திற்காக வினாடிக்கு 1148 கனஅடி நீர் திறந்துவிடப்படுகிறது.

# 2026 தேர்தலில் தி.மு.க. கூட்டணியா? வேறு கூட்டணியா? திருமாவளவன் பதில்

சென்னை, நவ.7

நடிகர் விஜய் தமிழக வெற்றிக் கழகம் என்ற புதிய கட்சியை தொடங்கி முதல் மாநாட்டை விக்கிரவாண்டியில் நடத்தி முடித்துள்ளார்.

த.வெ.க. மாநாட்டில் கூடிய இளைஞர்கள் கூட்டம் தமிழகத்தின் அரசியல் கட்சிகளை திரும்பி பார்க்க வைத்துள்ளது. மாநாட்டில் பேசிய விஜய் கூட்டணியை வரவேற்று அதிகாரத்தில் பங்கு தரப்படும் என்று அறிவித்துள்ளார். இந்த அறிவிப்பு தமிழக அரசியல் கட்சிகள் இடையே பெரும் அதிர்வை ஏற்படுத்தி உள்ளது.

இதனிடையே சென்னையில் நடைபெறும் புத்தக வெளியீட்டு விழாவில் விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவனும், தமிழக வெற்றிக்கழகத் தலைவர் விஜயும் ஒரே மேடையில் சந்தித்து பேச உள்ளதாக தகவல் வெளியானது. இதனால் இரு கட்சிகளுக்கு இடையே 2026 சட்டமன்ற தேர்தலையொட்டி கூட்டணி உறுதி என்று பரபரப்பாக பேசப்பட்டு வந்தது.

இந்த நிலையில், 2026 சட்டசபை தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் தான் நீடிப்போம் என்று விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் கூறியுள்ளார். மேலும் இந்த கூட்டணியை விட்டு விட்டு வேறு கூட்டணிக்கு போக வேண்டிய எந்த தேவையும் வி.சி.க.வுக்கு இல்லை என்றும் கூறியுள்ளார்.

# அமெரிக்க அதிபர் தேர்தலில் கமலா ஹாரிஸ் வெற்றி பெற பூர்வீக கிராமத்தில் சிறப்பு பூஜை

தஞ்சாவூர், நவ.7

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஜனநாயக கட்சி சார்பில் கமலா ஹாரிஸ் போட்டியிடுகிறார். இன்று அங்கு வாக்குப்பதிவு நடக்கிறது. கமலா ஹாரிஸ் இந்திய வம்சாவளியை சேர்ந்தவர். அதுவும் தமிழ்நாட்டை சேர்ந்தவர். அவருடைய தாய்வழி தாத்தாவின் பூர்வீகம் திருவாரூர் மாவட்டத்தில் உள்ள துளசேந்திரபுரம் ஆகும்.

இந்தநிலையில் கமலா ஹாரிஸ் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற வேண்டி, துளசேந்திரபுரம் கிராமத்தில் உள்ள தர்ம சாஸ்தா கோவிலில் நேற்று சிறப்பு பூஜைகள் நடந்தன. மேலும் அவரை வாழ்த்தி கிராமம் முழுவதும் பதாகைகள் வைக்கப்பட்டுள்ளன. உள்ளூர் மக்கள் சிலர், இனிப்புகளை வழங்கி கொண்டாடி வருகிறார்கள்.

இதேபோல் மதுரை உள்ளிட்ட தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் கமலா ஹாரிஸ் வெற்றிக்காக சிறப்பு வழிபாடுகள் நடத்தப்பட்டன.

# கோவையில் பெண் வங்கி ஊழியர், கணவருடன் விஷம் குடித்து தற்கொலை பரபரப்பு கடிதம் சிக்கியது



கோவை, நவ.7

விருதுநகர் மாவட்டம் சிவகாசி அடுத்த பூலாவூரணியை சேர்ந்தவர் பழனிச்சாமி(வயது39). இவர் வீட்டில் வைத்து மாணவர்களுக்கு டியூசன் எடுத்து வந்தார்.

இவரது மனைவி வத்சலா(35). இவர்களுக்கு 7 வயதில் மகன் இருந்தார். வத்சலா அங்குள்ள தனியார் வங்கி ஒன்றில் ஊழியராக வேலை பார்த்து வந்தார்.

இந்த நிலையில் கடந்த ஏப்ரல் மாதம் பழனிச்சாமியின் மகன் மூளைக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டார். அவரை ஆஸ்பத்திரியில் அனுமதித்து சிகிச்சை அளித்து வந்தனர். ஆனாலும் அவர் சிகிச்சை பலனின்றி பரிதாபமாக இறந்து விட்டார்.

மகன் இறந்த நாளில் இருந்து பழனிச்சாமியும், அவரது மனைவி வத்சலாவும் மிகுந்த மன வேதனையில் காணப்பட்டனர். அவர்களுக்கு உறவினர்கள் ஆறுதல் கூறி அவர்களை சமாதானப்படுத்தி வந்தனர். ஆனாலும் மகன் இறந்த துக்கம் தாங்க முடியாமல் இருவரும் தவித்தனர்.

இதையடுத்து உறவினர்கள் 2 பேரையும், கோவையில் உள்ள உறவினர் வீட்டிற்கு சென்று சில காலம் தங்கி வாருங்கள் என கூறி அனுப்பி வைத்தனர். அதன்படி கடந்த சில மாதங்களுக்கு முன்பு 2 பேரும் கோவைக்கு வந்தனர்.

சிறிது நாட்கள் 2 பேரும் தங்களது உறவினர் வீட்டில் தங்கி இருந்தனர். பின்னர் வேடப்பட்டி வி.கே.வி. ஸ்ரீநகர் பகுதியில் வீடு ஒன்றை வாடகைக்கு எடுத்து தங்கினர். வத்சலா வீட்டில் இருந்தபடியே வேலை பார்த்து வந்தார்.

இங்கு வந்த பின்னரும் அவர்களுக்கு மகன் நினைவாகவே இருந்தது. மகன் தங்களை விட்டு போய் விட்டானே என நினைத்து நினைத்து வருத்தப்பட்டு கொண்டே இருந்தனர். ஒருகட்டத்தில் அவர்களும், தங்கள் மகன் சென்ற இடத்திற்கே சென்று விட முடிவு செய்தனர்.

அதன்படி நேற்று காலை வீட்டை விட்டு வெளியேறிய அவர்கள், நேராக காந்திபுரம் காட்டூர் பகுதிக்கு வந்தனர். அங்கு ஒரு லாட்ஜில் அறை எடுத்து 2 பேரும் தங்கினர்.

வெகுநேரமாகியும் 2 பேரின் நடமாட்டமும் வெளியில் தெரியவில்லை.

இதனால் சந்தேகம் அடைந்த லாட்ஜ் ஊழியர் ஒருவர் அறைக்கு சென்றார். அறை கதவை தட்டியபோது, கதவு பூட்டப்படாமல் திறந்து கொண்டது. அப்போது அங்குள்ள அறையில் கணவன், மனைவி 2 பேரும் வாயில் நுரை தள்ளிய நிலையில் பிணமாக கிடந்தனர்.

இதை பார்த்ததும் அதிர்ச்சியான அந்த ஊழியர் சத்தம் போட்டார். அவரது சத்தம் கேட்டு அங்கிருந்த மற்றவர்களும் ஓடி வந்து பார்த்தனர். சம்பவம் குறித்து காட்டூர் போலீசாருக்கு தகவல் அளிக்கப்பட்டது.

இன்ஸ்பெக்டர் தவுலத் நிஷா தலைமையிலான போலீசார் விரைந்து வந்து 2 பேரின் உடல்களையும் மீட்டு பிரேத பரிசோதனைக்காக கோவை அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

அவர்கள் எப்படி இறந்தனர் என்பதை அறிய போலீசார் அங்கு சோதனை செய்தனர். அப்போது அங்கு 2 குளிர்பான பாட்டில்கள் கிடந்தன. அதனை பறிமுதல் செய்தனர்.

அவர்கள் மகன் இறந்த துக்கத்தில் குளிர்பானத்தில் விஷத்தை கலந்து குடித்து தற்கொலை செய்தது தெரியவந்தது.

அத்துடன் அவர்கள் பிணமாக கிடந்த இடத்தின் அருகே ஒரு கடிதம் இருந்தது. அந்த கடிதத்தையும் போலீசார் கைப்பற்றினர்.

அந்த கடிதத்தில், எங்களது இறப்புக்கு யாரும் காரணமில்லை. எங்களது மகன் இறந்த அதிர்ச்சியில் இருந்து எங்களால் மீளமுடியவில்லை. இதனால் நாங்களும் எங்கள் மகன் சென்ற இடத்திற்கே செல்கிறோம் என எழுதப்பட்டிருந்தது.

இதுகுறித்து பழனிச்சாமியின் சகோதரர் முருகேஷ் அளித்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# 4வது கணவரை உதறிவிட்டு வாலிபரை 5வது திருமணம் செய்ய வந்த இளம்பெண்

இரணியல், நவ.7

திண்டுக்கல் மாவட்டம் எரியோடு போலீஸ் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியை சேர்ந்த தொழிலாளி ஒருவர் தனது உறவினர்களுடன் குமரி மாவட்டம் இரணியல் வந்தார். அவர் போலீஸ் நிலையம் சென்று ஒரு புகார் கொடுத்தார். அதில் தான் கட்டிட வேலை பார்த்து வருவதாகவும் சம்பவத்தன்று வேலைக்கு சென்று விட்டு வீடு திரும்பிய போது 2 குழந்தைகளுக்கு தாயான தனது மனைவி மாயமாகி இருந்ததாகவும் குறிப்பிட்டு இருந்தார்.

இதுபற்றி விசாரித்த போது, தற்போது குமரி மாவட்டம் பேயன்குழி பகுதியை சேர்ந்த ஒரு வாலிபருடன் தனது மனைவி வந்ததும், அவர்களுக்கு திருமணம் நடக்க இருப்பது தெரிய வந்ததாகவும் குறிப்பிட்டு இருந்தார். இதுகுறித்து இரணியல் போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் ஜாண் போஸ்கோ மற்றும் போலீசார், அந்த வாலிபரை போனில் தொடர்பு கொண்ட போது தான் யாரையும் அழைத்து வரவில்லை என்று அவர் கூறி உள்ளார். இருப்பினும் சந்தேகத்தின் பேரில் போலீசார் விசாரித்த போது ஒரு கோவிலில் வைத்து வாலிபருக்கும் திண்டுக்கல் பெண்ணுக்கும் திருமண ஏற்பாடுகள் நடப்பது தெரியவந்தது. இதனையடுத்து போலீசார் அந்த பெண்ணையும், வாலிபரையும் போலீஸ் நிலையம் அழைத்து வந்தனர். அப்போது அந்த பெண், திண்டுக்கல் தொழிலாளி தனக்கு 4வது கணவர் என்றும், அவர் மது அருந்தி விட்டு வந்து தாக்குதல் நடத்தியதாகவும் அவரது செயல்பாடுகள் பிடிக்காமல் தான், தன்னுடன் வேலை செய்த குமரி மாவட்ட வாலிபர் உடன் இணைந்து வாழ விரும்பி வந்ததாகவும் கூறினார். ஆனால் அவர் முறைப்படி விவாகரத்து செய்யாத நிலையில் திருமணம் செய்வது தவறானது என அவருக்கு அறிவுரை கூறிய போலீசார், கணவர் மற்றும் குழந்தைகளுடன் இணைந்து வாழ அறிவுரை வழங்கினர். ஆனால் அந்த பெண், கணவர் மற்றும் மகன்களை உதறிவிட்டு பேயன் குழி வாலிபருடன் சென்று விட்டார். இச்சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# வாயு கசிவு ஏற்பட்ட தனியார் பள்ளிக்கு 3 நாட்கள் விடுமுறை




சென்னை, நவ.7

சென்னை திருவொற்றியூர் கிராமத் தெருவில் தனியாருக்கு சொந்தமான விக்டரி மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப்பள்ளி உள்ளது. இங்கு 6ம் வகுப்பு முதல் பிளஸ்2 வரை 1500க்கும் மேற்பட்ட மாணவமாணவிகள் படித்து வருகிறார்கள். இந்த பள்ளி கட்டிடத்தின் 3வது தளத்தில் 6ம் வகுப்பு முதல் பிளஸ்2 வரை மாணவமாணவிகள் படித்து வருகிறார்கள். அதற்கு எதிர் தளத்தில் ஆய்வுக்கூடமும் உள்ளது.

கடந்த மாதம் 26ந் தேதி இந்த ஆய்வுக்கூடத்தில் இருந்து ரசாயன வாயு கசிவு ஏற்பட்டது. இதனால் வகுப்பறையில் இருந்த 45 மாணவிகளுக்கு வாந்தி, மயக்கம், மூச்சுத்திணறல், கண் எரிச்சல், தொண்டை எரிச்சல் ஏற்பட்டது. சில மாணவிகள் வாந்தி ஏற்பட்டு மயங்கி விழுந்ததால் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வீடு திரும்பினர்.

இதனால் கடந்த 1 வாரமாக பள்ளிக்கு விடுமுறை அளிக்கப்பட்டது. பள்ளியில் உள்ள ஆய்வுக்கூடத்தை மாசு கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகள் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். ஆனால் தற்போது வரை ஆய்வுக்கூடத்தில் ரசாயன வாயுகசிவு ஏற்பட்டுள்ளதை கண்டுபிடிக்க முடியாமல் அதிகாரிகள் திணறி வருகின்றனர்.

தீபாவளி விடுமுறை முடிந்து நேற்று மீண்டும் பள்ளி திறக்கப்பட்டது. அப்போது திடீரென்று 9 மாணவிகள் மயக்கம் அடைந்தனர். மீண்டும் பள்ளியில் ரசாயன வாயு கசிவு ஏற்பட்டதால் மாணவிகளுக்கு பாதிப்பு ஏற்பட்டதாக கூறப்படுகிறது. இதனால் பெற்றோர்கள் அலறி அடித்துக்கொண்டு தங்கள் பிள்ளைகளை அழைத்துக்கொண்டு வீட்டுக்கு சென்றனர். மயக்கம் ஏற்பட்ட மாணவிகளை ஆம்புலன்ஸ் மூலம் எல்லையம்மன் கோவில் அருகில் உள்ள அரசு ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். அங்கு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

இது பற்றி தகவல் அறிந்ததும் தீயணைப்பு துறையினர், தாசில்தார் சகாயராணி, திருவொற்றியூர் மண்டல அதிகாரி புருஷோத்தமன், மருத்துவத்துறை அதிகாரிகள் உடனடியாக பள்ளிக்கு வந்தனர். மாநகராட்சி வடக்கு வட்டாரத் துணை கமிஷனர் ரவிகட்டா தேஜா அதிகாரிகளுடன் பள்ளியை ஆய்வு செய்தனர்.

தனியார் பள்ளியில் மாசு கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகள் தொடர்ந்து இன்று 2வது நாளாக சோதனை நடத்தி வருகின்றனர். காற்றில் இருக்கக்கூடிய நச்சுத்தன்மை, வாயுக்களின் தரம் அறியும் இயந்திரம் கொண்டு மாசு கட்டுப்பாட்டு வாரியம் சோதனை நடத்தியது.

இந்நிலையில் வாயு கசிவு ஏற்பட்ட தனியார் பள்ளிக்கு 3 நாட்கள் விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. தொடர்ச்சியாக 3 நாட்கள் ஆய்வு செய்து இந்த வாரத்தின் இறுதியில் இறுதி அறிக்கையை சமர்ப்பிக்க அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர்.

# திருச்சியில் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு வெடிகுண்டு மிரட்டல்

திருச்சி, நவ.7

நாடு முழுவதும் விமானங்கள் மற்றும் பள்ளிகளுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கும் சம்பவங்கள் சமீப காலமாக அதிகரித்து வருகிறது. இதனைத் தொடர்ந்து அதிகாரிகள் சோதனையிடும் போது அது புரளி என தெரியவருகிறது.

இந்த நிலையில், திருச்சி மாவட்டத்தில் பள்ளிகள் மற்றும் ஒரு கல்லூரிக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுத்துள்ள சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

திருச்சியில் மகாத்மா காந்தி நூற்றாண்டு மேல்நிலைப் பள்ளி, ராஜாஜி வித்யாலயா, சந்தானம் வித்யாலயா, ராஜம் கிருஷ்ணமூர்த்தி மேல்நிலைப் பள்ளி மற்றும் ஹோலிகிராஸ் பெண்கள் கல்லூரிக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட பள்ளிகள் மற்றும் கல்லூரியில் வெடிகுண்டு நிபுணர்கள் சோதனையில் ஈடுபட்டனர்.

## அடுத்த படத்தில் அமீர்கானுடன் இணையும் சாய்பல்லவி ? அமரன் இயக்குனர் பகிர்ந்த தகவல்



நடிகை சாய்பல்லவி, தற்போது ராஜ்குமார் பெரியசாமி இயக்கத்தில் அமரன் படத்தில் நடித்துள்ளார். கடந்த தீபாவளியன்று வெளியான இப்படம் இதுவரை ரூ.150 கோடிக்கு மேல் வசூலித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் சிவகார்த்திகேயன் மேஜர் முகுந்தாகவும், முகுந்தின் மனைவி இந்துவாக நடிகை சாய் பல்லவியும் நடித்துள்ளனர்.

இந்துவாக நடித்திருக்கும் சாய்பல்லவிக்கு பல்வேறு தரப்பினரும் பாராட்டுகளை தெரிவித்து வருகின்றனர். இந்நிலையில், அமரன் பட நிகழ்ச்சி ஒன்றில் பேசிய இயக்குனர் ராஜ்குமார்பெரியசாமி, சாய்பல்லவி அடுத்ததாக அமீர்கானுடன் இணைந்துள்ளதாக கூறினார். அதன்படி, அமீர்கான் தயாரிப்பு நிறுவனத்தின் கீழ் ஒரு படத்தில் நடிகை சாய்பல்லவி நடித்துவருவதாகவும், இந்தியில் உருவாகிவரும் இப்படம் விரைவில் திரைக்கு வரவுள்ளதாகவும் கூறினார்.

சாய்பல்லவி ஏற்கனவே, நிதிஷ் திவாரி இயக்கத்தில் தயாராகும் 'ராமாயணம்' படத்தில் சீதையாக நடித்து வருகிறார். இரண்டு பாகங்களாக உருவாகும் இப்படத்தின் 1ம் பாகம் 2026ம் ஆண்டு தீபாவளிக்கும், 2ம் பாகம் 2027ம் ஆண்டு தீபாவளிக்கும் வெளியாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## சாய் பல்லவி சீதையாக நடிக்கும் 'ராமாயணம்' படத்தின் ரிலீஸ் தேதி அறிவிப்பு




நிதிஷ் திவாரி இயக்கத்தில் ராமாயணம் கதையை மையமாக வைத்து தயாராகும் 'ராமாயணம்' படத்தில் ராமராக ரன்பீர் கபூர், சீதையாக சாய் பல்லவி ஆகியோர் நடிக்கின்றனர். கன்னட நடிகர் யாஷ் ராவணனாக வருகிறார். இப்படத்திற்கு ஏ.ஆர்.ரகுமான் இசையமைக்கிறார்.

இந்த படத்தில் அனுமானாக சன்னி தியோல், கும்பகர்ணனாக பாபிதியோல் ஆகியோர் நடிக்கின்றனர். ரூ.1,000 கோடி பட்ஜெட்டில் தமிழ், தெலுங்கு, இந்தி உள்ளிட்ட மொழிகளில் இப்படத்தை உருவாக்குகின்றனர். படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடந்துவரும் நிலையில், அதிலிருந்து சில புகைப்படங்கள் ஏற்கனவே வலைதளத்தில் கசிந்து வைரலாகின. இப்படம் மூன்று பாகங்களாக உருவாக இருப்பதாக கூறப்பட்ட நிலையில், தற்போது இப்படத்தின் 2 பாகங்களில் ரிலீஸ் தேதியை படக்குழு அறிவித்துள்ளது. அதன்படி, முதல் பாகம் 2026ம் ஆண்டு தீபாவளிக்கு வெளியாகும் என்றும் இரண்டாம் பாகம் 2027ம் ஆண்டு தீபாவளிக்கு வெளியாகும் என்றும் படக்குழு போஸ்டர் வெளியிட்டு தெரிவித்துள்ளது. சாய்பல்லவி நடிப்பில் கடந்த தீபாவளியன்று வெளியான 'அமரன்' படம் மிகப்பெரிய ஹிட் அடித்துள்ளநிலையில், சாய் பல்லவி சீதையாக நடிக்கும் 'ராமாயணம்' படத்தின் ரிலீஸ் தேதி அறிவிக்கப்பட்டிருப்பது அவரது ரசிகர்களை உற்சாகமடையவைத்துள்ளது.

## 'பிரதர்' படம் எப்படி இருக்கிறது விமர்சனம்



ஒரு கல் ஒரு கண்ணாடி'க்குப் பிறகு இயக்குனர் ராஜேஷ் இயக்கும் 'பிரதர்' படத்தில் ஜெயம் ரவி நடித்துள்ளார். இந்த படம் அனைத்து தரப்பு ரசிகர்களும் கண்டு மகிழக்கூடிய வகையில் கலகலப்பான குடும்ப படமாக உருவாகியுள்ளது. தீபாவளியை முன்னிட்டு இப்படம் திரையரங்குகளில் வெளியானது. தற்போது இப்படம் எப்படி உள்ளது என்பதை காண்போம்.

சட்ட படிப்பு படிக்கும் மாணவராக வரும் கார்த்தி என்ற காதாபாத்திரத்தில் நடித்துள்ள ஜெயம் ரவி சென்னையில் தனது குடும்பத்துடன் வாழ்ந்து வருகிறார். வழக்கறிஞர் படிப்பை முடிக்காவிட்டாலும் எதற்கெடுத்தாலும் 'லா பாயின்ட்' பேசுகிறார் ஜெயம் ரவி. இதனால் வீட்டில் பிரச்சினை ஏற்பட அவரைத் திருத்துவதற்காக, ஊட்டியில் இருக்கும் அக்கா பூமிகா அங்கு அழைத்துச் செல்கிறார். அங்கும் ஜெயம் ரவியால் பூமிகாவின் குடும்ப வாழ்க்கையில் விரிசல் ஏற்படுகிறது. இதனால் பூமிகா கணவனின் வீட்டை விட்டு தம்பியுடன் வெளியேறுகிறார். இதையடுத்து பிரிந்த குடும்பத்தை எப்படி ஜெயம் ரவி ஒன்று சேர்க்கிறார்? என்பது மீதி கதை. கார்த்தி கதாபாத்திரத்தில் ஜெயம் ரவி கச்சிதமாகப் பொருந்தியிருக்கிறார். ஆவேச காட்சிகளில் அசத்துவதுபோல் நகைச்சுவையிலும், எமோஷன் காட்சியிலும் நன்றாக ஸ்கோர் செய்கிறார். பிரியங்கா மோகன் அழகில் வசீகரிக்கிறார். அக்கா கதாபாத்திரத்தில் அழகாக நடித்திருந்தாலும், பூமிகாவுக்கு இன்னும் வாய்ப்பு கொடுத்திருக்கலாம். விடிவி கணேஷின் நகைச்சுவை சில இடங்களில் சிரிக்க வைக்கிறது. ராவ் ரமேஷ், நட்டி, சரண்யா பொன்வண்ணன், அச்யுத்குமார், சீதா, சதீஷ் கிருஷ்ணன் ஆகியோரும் குறையில்லாமல் நடித்திருக்கிறார்கள். பூமிகாவின் கணவராக வரும் நட்டி நட்ராஜ் அனுபவ நடிப்பின் மூலம் திறமையான நடிகர் என்பதை நிரூபித்துள்ளார். ஹாரிஸ் ஜெயராஜ் இசையில் 'மக்காமிஷி' ரசிக்க வைக்கிறது. பின்னணி இசை கதையை இலகுவாக நகர்த்த உதவுகிறது. ஒளிப்பதிவாளர் விவேகானந்த் சந்தோஷம் ஊட்டி அழகை பிரமாதமாக காட்டி கண்களுக்கு விருந்தளித்துள்ளார். பாடல் காட்சிகளை உயர்தரத்தில் படமாக்கிய விதம் அருமை.காமெடி, காதல், சென்டிமென்ட், அக்காதம்பி பாசத்துடன் கவலைகளை மறந்து ரசிக்கும்படியான பொழுதுபோக்கு படத்தைக் கொடுத்துள்ளார் இயக்குனர் ராஜேஷ்.

## ஐபிஎல் 2025 மெகா ஏலம்: இடத்தை முடிவு செய்த பிசிசிஐ?




ஐபிஎல் 18வது சீசன் அடுத்த வருடம் மார்ச் மாத இறுதியில் துவங்கும் என தெரிகிறது. இந்த நிலையில் ஒவ்வொரு அணியின் தக்கவைக்கும் வீரர்கள் பட்டியலை சமீபத்தில் தான் வெளியிட்டது. அதன்படி சென்னை சூப்பர் கிங்ஸ், கொல்கத்தா நைட் ரைடர்ஸ், மும்பை இந்தியன்ஸ், லக்னோ சூப்பர் ஜெயண்ட்ஸ், சன்ரைசர்ஸ் ஐதராபாத், குஜராத் டைட்டன்ஸ் ஆகிய அணிகள் 5 வீரர்களை தக்க வைத்துள்ளன.

பஞ்சாப் அணி இரண்டு வீரர்களையும், ஆர்.சி.பி. அணி மூன்று வீரர்களையும், டெல்லி அணி நான்கு வீரர்களையும், ராஜஸ்தான் ராயல்ஸ் ஆறு வீரர்களையும் தக்க வைத்துள்ளது. வீரர்களை தக்க வைத்தது போக ஒவ்வொரு அணியிடமும் புதிய வீரர்களை வாங்குவதற்கு கணிசமான தொகை கையிருப்பு உள்ளது.

இதில் அதிகபட்சமாக பஞ்சாப் அணியிடம் ரூ.110.5 கோடியும் குறைந்த பட்சமாக ராஜஸ்தான் அணியிடம் ரூ.41 கோடியும் உள்ளது. இந்நிலையில் ஐ.பி.எல். 2025 மெகா ஏலம் நவம்பர் 24 மற்றும் 25 ஆம் தேதிகளில் நடைபெற இருப்பதாக தகவல்கள் வெளியாகி வந்தது.

இந்த நிலையில், தற்போது வெளியாகி இருக்கும் தகவல்களில் ஐ.பி.எல். 2025 மெகா ஏலம் சவுதி அரேபியாவின் ஜெட்டாவில் நவம்பர் 24 மற்றும் நவம்பர் 25 ஆகிய தேதிகளில் நடைபெறும் என்று கூறப்படுகிறது. எனினும், இது குறித்து பிசிசிஐ சார்பில் இதுவரை அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## புரோ கபடி லீக்: உபி அணியை வீழ்த்தி திரில் வெற்றி பெற்ற ஜெய்ப்பூர்



11வது புரோ கபடி லீக் போட்டி இந்தியாவில் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், இந்த தொடரில் இன்று நடைபெற்ற முதல் லீக் ஆட்டத்தில் ஜெய்ப்பூர் பிங்க் பாந்தர்ஸ், யுபி யோதாஸ் அணிகள் மோதின.

தொடக்கம் முதலே இரு அணிகளும் சிறப்பாக ஆடியதால், யாருக்கு வெற்றி என்பதில் கடும் போட்டி நிலவியது.

இறுதியில், உபி யோதாஸ் அணியை 3330 என்ற புள்ளிக்கணக்கில் வீழ்த்தி ஜெய்ப்பூர் பிங்க் பாந்தர்ஸ் அணி திரில் வெற்றி பெற்றது.

ஜெய்ப்பூர் பிங்க் பாந்தர்ஸ் அணியின் 3வது வெற்றி ஆகும்.

## பெண்கள் டென்னிஸ் சாம்பியன்ஷிப்: அமெரிக்க வீராங்கனை அதிர்ச்சி தோல்வி




உலகின் டாப்8 முன்னணி வீராங்கனைகள் மட்டும் பங்கேற்கும் டபிள்யூ.டி.ஏ. இறுதிச்சுற்று எனப்படும் பெண்கள் டென்னிஸ் சாம்பியன்ஷிப் போட்டி சவுதி அரேபியா தலைநகர் ரியாத்தில் நடைபெற்று வருகிறது.

ஒற்றையர் பிரிவில் இன்று நடந்த ஆட்டத்தில் அமெரிக்க வீராங்கனையான ஜெசிகா பெகுலா, செக் வீராங்கனை பார்பரா கிரெஜ்சிகோவா உடன் மோதினார்.

இதில் கிரெஜ்சிகோவா 63, 63 என்ற செட் கணக்கில் வென்றார். இதில் அமெரிக்க வீராங்கனை பெகுலா அதிர்ச்சி தோல்வி அடைந்தார்.

**NAMADHU DHINA KANI**
**Canara Bank**
**Account: 120028528266**
**IFSC code: CNRB0001041**

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.